**சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி**

**mcop No. 105/2023**
நாள் 20.03.2025

**<u>ம.சா.1 .2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

வயது, வருமானம் மற்றும் தொழில் குறித்து எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் ஆதார் அட்டை தாக்கல் செய்துள்ளேன். நான் திருப்பூரில் பனியன் கம்பெனியில் வேலை பார்த்து வருவதற்கான எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். மாதம் எவ்வளவு வருமானம் வரும் என்று குறிப்பாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து எப்போது நடைபெற்றது என்றால் 18.01.2020ல் இரவு 09.00 மணியளவில் நடந்தது. விபத்து நடந்த இடமானது ரோடு வளைவான பகுதி என்றால் சரிதான். நான் பேருந்திலிருந்து இறங்கி சாலையில் நான் நடந்து போய் பேசிக்கொண்டு சாலை மறித்து சென்றதால்தான் இந்த விபத்தில் எனக்கும், சதிஷ்பாபு என்பவருக்கும் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த பிறகு எந்த மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் திருத்துறைப்பூண்டியில் உள்ள அரசு மருத்துமனியல் முதல் உதவி சிகிச்சை பெற்று மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றேன். நான் அரசு மருத்துவமனையில் இலவசமாக சிகிச்சை பெற்றதால் மருத்துவ செலவினம் இல்லை என்று சொன்னால்
நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தேன். நான் சொல்வது போல் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தால் அது குறித்து ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும் அதனால் தான் வழக்கிற்காக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எடுத்துக்கொண்டு சிகிச்சையின் மூலமாக எனக்கு ஏற்பட்ட காயங்கள் பூரணமாக குணமடைந்து விட்டது என்றும், நஷ்ட ஈடு அதிகமாக பெற வேண்டும் என்பதற்காக இயலாமையயை மிகைபடுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என்மீது மோதிய வண்டியின் ஓட்டுநருக்கு விபத்து நாளில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் அந்த வாகனத்தின்

உரிமையாளரிடம் தான் நஷ்ட ஈடு பெற வேண்டும் என்றும் 2ம் எதிர் மனுதாரரரிடமிருந்து எந்த நஷ்ட ஈடு தொகையும் கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், நான் மனுவில் கோரியுள்ள நஷ்ட ஈடு தொகை அதிகமானது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு நானும் ஒரு காரணம் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.

**சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி**

**MCOP No. 280/2023**
நாள் 14.03.2025

**ம.சா.1. எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் கொத்தனாராக வேலை செய்து வருகிறேன். மாத வருமானம் ரூ.40,000/- ஈட்டி வருகிறேன். விபத்து நடந்த தேதி தெரியுமா என்றால் 24.12.2022-ல் நடந்தது. எத்தனை மணிக்கு என்றால் மதியம் 1.00 மணி இருக்கும். எந்த இடத்தில் விபத்து நடைப்பெற்றது என்றால் ஆலத்தம்பாடி எஸ்பிஐ ஏடிஎம் அருகில் நடந்தது. விபத்து ஏற்பட்ட சமயத்தில் நான் எந்த திசையிலிருந்து எந்த திசைக்கு சென்றேன் என்றால் எனது இருசக்கர மோட்டார் சைக்கிளில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி எனது வீட்டிற்கு சென்றேன். எனக்கு சொந்தமான மோட்டார் சைக்கிளுக்கு காப்பீடு உள்ளதா என்றால் இல்லை. எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எந்த வாகனம் என் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது என்றால் அரசுக்கு சொந்தமான விரைவு பேருந்து. என் மீது மோதிய பேருந்தின் பதிவு எண் தெரியுமா என்றால் 0301. எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் TN AT 7919 Yamaha. விபத்து நடந்தவுடன் எந்த மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன் என்றால் திருத்துறைப்பூண்டியிலுள்ள அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மருத்துவர் ஆலோசனைப்படி திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். விபத்து சமயத்தில் நான் மது அருந்தியிருந்தேனா என்றால் இல்லை. நான் மாதம் ரூ.40,000/- வருமானம் ஈட்டினார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.

**சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி**

**MCOP No. 242/2023**
நாள் 14.03.2025

**<u>எ.ம.சா.1. மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

நான் விபத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக சி.சி.எண்.147/2024 என்ற வழக்கில் நான் எதிரியாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் விபத்து ஏற்பட்ட சமயத்தில் அரசு பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி விபத்து ஏற்படுத்தியதால் திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் என் மீது குற்ற எண்.229/2022 என வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பேருந்தை ஓட்டிச் செல்லும்போது எந்தவிதமான முன் எச்சரிக்கை இல்லாமலும், ஹாரன் அடிக்காமலும் சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோன ரகுபதி என்பவர் குடிப்போதையில் இருந்தார் என இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் இறந்துபோன ரகுபதி என்பவருக்கு அரசு பேருந்துக் கழகம் தான் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. விபத்தானது என்னுடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றும் அதனால் தான் ரகுபதிக்கு விபத்து ஏற்பட்டு இறந்ததால் காவல் துறை என் மீது வழக்கு பதிவு செய்து வழக்கு நிலுவையிலிருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்தை ஏற்படுத்திவிட்டு தற்போது இந்த வழக்கிற்காக விபத்து ஏற்படுத்தவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.

என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் கொண்டும், உரிய காப்பீடு செய்தும், சாலை விதிகளை அனுசரித்தும் 1ம் எதிர்மனுதாரர் நடந்ததால் இழப்பீடு கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.